**TAMIL LANGUAGE AND LITERATURE**
**தமிழ்மொழி, இலக்கியம்**
Singapore-Cambridge General Certificate of Education
Advanced Level Higher 3 (2021)
(Syllabus 9941)

# தேர்வு அமைப்புமுறை

உயர்தரம் 3 தமிழ்மொழி, இலக்கியத் தேர்வு ஒரு வினாத்தாளைக் கொண்டது. இத்தாள் **பகுதி 1**, **பகுதி 2** ஆகியவற்றை உள்ளடக்கியது. இவ்வினாத்தாளுக்கு விடையெழுத 3 மணி நேரம் வழங்கப்படும்.

**பகுதி 1: கருத்து வெளிப்பாட்டு வரைவு (50 மதிப்பெண்கள், 50%)**

இப்பகுதியில் கொடுக்கப்படும் மூன்று தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றினைப்பற்றி 400 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுதவேண்டும். இத்தலைப்புகள் படைப்பாக்கத்திறன் சார்ந்ததாகவும் கொடுக்கப்பட்டுள்ள தலைப்பையொட்டி விவாதித்துக் கருத்துரைப்பதாகவும் அமைந்திருக்கும்.

- **படைப்பாக்க வரைவு**

கொடுக்கப்பட்டுள்ள ஒரு கருப்பொருளை அல்லது படம் சார்ந்த சூழலையொட்டிச் சிறுகதை அல்லது நாடகம் ஒன்றை எழுதவேண்டும்.

- **கருத்துரை வரைவு**

கொடுக்கப்பட்டுள்ள ஒரு தலைப்பையொட்டி ஆராய்ந்து விவாதித்துக் கருத்துரைக்கவேண்டும்.

கருத்து வளம், கற்பனைத்திறன், படைப்பாக்கத்திறன், மொழித்திறன், அமைப்புமுறை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு தேர்வெழுதுவோரின் படைப்பு மதிப்பிடப்படும்.

**பகுதி 2: திறனாய்வு நோக்கில் பகுப்பாய்வு (50 மதிப்பெண்கள், 50%)**

இலக்கிய வினாக்களை அடிப்படையாகக்கொண்ட இப்பகுதி **‘அ’**, **‘ஆ’** ஆகிய இரு பிரிவுகளை உள்ளடக்கியது.

- ‘**அ**’ **பிரிவு:** திறனாய்வு நோக்கில் பகுப்பாய்வு (பரிந்துரைக்கப்பட்ட இலக்கிய நூல்களை அடிப்படையாகக் கொண்டது)

- ‘**ஆ**’ **பிரிவு:** திறனாய்வு நோக்கில் பகுப்பாய்வு (பார்த்திராத சிறுகதை, கவிதை, உரைநடைப் பகுதி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது)

**‘அ’ பிரிவு: திறனாய்வு நோக்கில் பகுப்பாய்வு** (25 மதிப்பெண்கள், 25%)
(பரிந்துரைக்கப்பட்ட இலக்கிய நூல்களை அடிப்படையாகக் கொண்டது)

இப்பிரிவில் 4 வினாக்கள் இடம்பெறும். பரிந்துரைக்கப்பட்ட சிறுகதை நூலிலிருந்து இரண்டு வினாக்களும் பரிந்துரைக்கப்பட்ட இலக்கியக் கட்டுரைத் தொகுப்பு நூலிலிருந்து இரண்டு வினாக்களும் இடம்பெறும். தேர்வெழுதுவோர் இப்பிரிவிலிருந்து **ஒரு வினாவிற்கு மட்டும்** விடையளிக்கவேண்டும். இவ்வினாத்தாள் திறந்த புத்தக மதிப்பீட்டு முறையில் அமைந்திருக்கும்.

**பரிந்துரைக்கபபட்டுள்ள சிறுகதை நூல்**

- தூண்டில் மீன்
  ஆசிரியர்: திரு மா. இளங்கண்ணன்

**பரிந்துரைக்கப்பட்டுள்ள இலக்கியக் கட்டுரைத் தொகுப்பு நூல்**

- தமிழின்பம்
  ஆசிரியர்: டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை

**‘ஆ’ பிரிவு: திறனாய்வு நோக்கில் பகுப்பாய்வு** (25 மதிப்பெண்கள், 25%)
(பார்த்திராத சிறுகதை, உரைநடைப் பகுதி, கவிதை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது)

இப்பிரிவில் 2 வினாக்கள் இடம்பெறும். தேர்வெழுதுவோர் இப்பிரிவிலிருந்து **ஒரு வினாவிற்கு மட்டும்** விடையளிக்கவேண்டும். தேர்வெழுதுவோர் வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள கவிதை/சிறுகதை/உரைநடைப் பகுதியைப் படித்து அவற்றுள் ஏதேனும் **ஒரு வினாவை மட்டும்** தேர்ந்தெடுத்துத் திறனாய்வு நோக்கில் பகுப்பாய்வு செய்து விடையெழுதவேண்டும்.

கருத்து வளம், திறனாய்வு நோக்கு, மொழித்திறன், அமைப்புமுறை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு தேர்வெழுதுவோரின் படைப்பு மதிப்பிடப்படும்.

## தேர்வு விவர அட்டவணை

**சிங்கப்பூர்-கேம்பிரிட்ஜ் பொதுக் கல்விச் சான்றிதழ் மேனிலைத் தேர்வு**
**உயர்தரம் 3 தமிழ்மொழி, இலக்கியம் (9941)**

| தாள் (நேரம்) | பொருளடக்கம் | வினா வகை | வினாக்களின் எண்ணிக்கை | மதிப்பெண் (மதிப்பளவு) |
|---|---|---|---|---|
| 1<br><br>(3 மணி நேரம்) | **பகுதி 1**<br><br>**கருத்து வெளிப்பாட்டு வரைவு** கட்டுரை **(400** சொற்கள்)<br>• வகைகள்: படைப்பாக்க வரைவு, கருத்துரை வரைவு | கட்டுரை | **3**<br>(ஒரு வினாவிற்கு விடையளித்தல்) | **50 (50%)** |
| | **பகுதி 2**<br><br>**'அ' பிரிவு**<br><br>**திறனாய்வு நோக்கில் பகுப்பாய்வு**<br>(பரிந்துரைக்கப்பட்ட இலக்கிய நூல்களை அடிப்படையாகக் கொண்டது)<br><br>'தூண்டில் மீன்' எனும் சிறுகதை நூலிலிருந்து இரு வினாக்கள்<br><br>'தமிழின்பம்' எனும் இலக்கியக் கட்டுரைத் தொகுப்பு நூலிலிருந்து இரு வினாக்கள் | சுயவிடை | **4**<br>(ஒரு வினாவிற்கு விடையளித்தல்) | **25 (12.5%)** |
| | **'ஆ' பிரிவு**<br><br>**திறனாய்வு நோக்கில் பகுப்பாய்வு**<br>(பார்த்திராத சிறுகதை, கவிதை, உரைநடைப் பகுதி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது) | சுயவிடை | **1** | **25 (12.5%)** |